# வேலணை மத்திய கல்லூரிக்குக் கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக பௌதீகவியல் புத்தகங்கள் அன்பளிப்பு

எமது கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியரும் தற்போது அமெரிக்காவில் வசிக்கும் சிவா மோகன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு சிவசிதம்பரம் மோகனச்சந்திரன் அவர்களது ஆலோசனைக்கிணங்க கனடாவில் வதியும் அவரது நண்பரும் பொறியியலாளருமான திரு




மயில்வாகனன் சுப்பிரமணியம் அவர்கள் காலஞ்சென்ற அவரது மகள் செல்வி அமிர்தா சுப்பிரமணியம் அவர்களது ஞாபகார்த்தமாக 550 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இயந்திர அண்டமும் அதற்கு அப்பாலும் (பகுதி 1-3) என்ற மூன்று தமிழ் மூலப் பௌதீகவியல் புத்தகங்களையும் அதற்கான இறுவட்டுக்களையும் கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு சி. இளஞ்செழியன் அவர்கள் மூலம் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் இவற்றைத் திரு மயில்வாகனன் அவர்களது சகோதரி திருமதி சறோஜினிதேவி ரவீந்திரன் அவர்கள் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அதிபர் திரு சி. கிருபாகரன் அவர்கள் முன்னிலையில் கல்லூரியின் தொழில்நுட்பப் பிரிவு ஆசிரியரிடம் வழங்கினார். மேலும் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் முதலாந் திகதி (01-11-2016) நடைபெறவுள்ளது. அன்றைய தினம் எமது பழைய மாணவர் சங்கத்தால் ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் என்ற புதிய நலத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



எமது கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றுவதற்குப் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பலவித இன்னல்களுக்கு மத்தியில் ஆசிரியர்கள் வருகை தருகின்றார்கள். அவ்வாறு வருகை தரும் ஆசிரியர்களை வினைத்திறனுடன் சேவையாற்ற வைப்பதற்கும் அவர்கள் தீவக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பதற்கும் ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் உந்துசக்தியாக அமையும் என்ற நம்பிக்கையில் தன்னலங் கருதாது பணிபுரியும் ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கும் சீரிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கடந்த பொதுச் சபைக்கூட்டத்தின் பரிந்துரைக்கிணங்க 26-09-2016 இல் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் இத்திட்டத்தின் சாதக பாதகங்கள் பற்றி உறுப்பினர்கள் நீண்ட கலந்துரையாடல் நடாத்தி நன்கு பரிசீலித்ததன் விளைவாக இந்த வருடப் பரிசளிப்பு விழாவில் இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதென்றும் வருடந்தோறும் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கு அடுத்து வரும் நிர்வாகசபைக்குப் பரிந்துரை செய்வதென்றும் தீர்மானித்துள்ளோம் என்பதனைச் சங்கத்தின் சார்பில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும்'**

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

**வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா**